பக்கங்கள் எட்டு

விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி

# VALAMPURI

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

அர்ச்சனா ஜுவலர்ஸ்

118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[கி-2127)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி 09 புதன்கிழமை (25-07-2001) தொலைபேசி: 3378 ஒலி: 226

## கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் நிர்மூலம்

★ 11 விமானங்கள் முற்றாக அழிப்பு ★ 3 விமானம் சேதம்

# சர்வதேசத்தை "திடுக்கிட" வைத்த புலிகளின் "மதிநுட்பத்" தாக்குதல்!

## அரசுக்கு 3000 கோடி ரூபா நட்டம்

(நமது விசேட நிருபர்)

கட்டுநாயக்கா சர்வதேச விமானத் தளத்தின் மீதும், விமானப் படைத் தளத்தின் மீதும் நேற்று அதிகாலை 3-55 மணிக்கு விடுதலைப் புலிகள் நடத்திய துணிகரத் தற்கொலைத் தாக்குதலில் சுமார் மூவாயிரம் கோடி ரூபா பெறுமதியான விமானப் படைக்குச் சொந்தமான எட்டு யுத்த விமானங்களும், ஏயர்லங்கா நிறுவனத்துக்குச் சொந்தமான ஆறு விமானங்களும் அழிக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் எட்டுப் படையினர் கொல்லப்பட்டும், இருபத்தேழு படையினர் காயமடைந்துமுள்ளனர். காயமடைந்த படையினர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் றாகம வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கறுப்பு ஜூலை தினத்தை நினைவுகூர்ந்து நேற்று அதிகாலை 3.55 மணிக்கு இத்துணிகரத் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

இத்தாக்குதலில் கொல்லப்பட்ட எட்டு படையினரில் 6 விமானப்படையினரும் 2 இராணுவத்தினரும் காயப்பட்ட 27 படையினரில் 25 இராணுவத்தினரும் 2 விமானப்படையினரும் அடங்குவர்.

சுமார் மூன்று மணிநேரம்

[8ஆம் பக்கம் பார்க்க]

## புலிகள் முற்றாக அழித்த 11 விமானங்களின் விபரம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலும் விமானப் படைத்தளத்திலும் தரித்து நின்ற 14 விமானங்கள் விடுதலைப்புலிகள் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

இதில் 11 விமானங்கள் முற்றாகத்தாக்கி அழிக்கப்பட்டுளது.

முற்றாக அழிக்கப்பட்ட விமானங்களின் விபரம்வருமாறு.

★ கிபிர் குண்டுவீச்சு விமானம் இரண்டு

★ எம். ஐ 24 ரக ஹெலி ஒன்று

(8ஆம் பக்கம் பார்க்க)

## மினி பஸ்ஸில் வந்த விடுதலைப்புலிகள் "வி" வடிவில் வியூகம் அமைத்து விமானத்தளத்தை தாக்கி அழித்தனர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளினால் நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட கட்டுநாயக்கா விமானப்படைத்தாக்குதல் வி வடிவில் வியூகம் அமைத்து மேற்கொள்ளப்பட்டதாக விமானப்படை அதிகாரிகள் கருத்துவெளியிட்டுள்ளனர்.

திம்புலப்பிட்டிய பக்கமாக வந்த விடுதலைப்புலிகள் விமானத்தளத்திற்கு அருகாமையிலுள்ள குரனறாஜ் விளையாட்டுஅரங்கில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் குளிர்பானம் அருந்தி உணவு உட்கொண்டதை அவ்வூர் வாசிகள் அவதானித்துளளனர் இதுபற்றி நீர்கொழும்பு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தபோதும்

[8ம் பக்கம் பார்க்க])

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சருடன் முப்படைத் தளபதிகள் அவசர மாநாடு

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமானத்தளம், விமானப்படைத் தளம் ஆகியவற்றின்மீது நேற்று அதிகாலை விடுதலைப்புலிகள மேற்கொண்ட அதிரடித்தாக்குதலை அடுத்து பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுரத்தரத்வத்த கூட்டுப்படைத் தளபதி றாகான் தலுவத்த இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் பல்லேகல, விமானப்படைத்தளபதி மாஷல் ஜயலத் வீரக்கொடி, கடற்படைத்தளபதி, மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே ஜனாதிபதியின் செயலாளர் பாலபெட்ட பென்டி ஆகியோர் விமானத்தளத்திற்கு விரைந்து அவசரமாநாடு கூடி அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி ஆராய்ந்துள்ளனர். (வ)

## விமான சேவை வழமைக்கு

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமானத்தளப்பகுதி படையினரின் பூரண கட்டுப்பாட்டுக்குக்கீழ்வந்ததை அடுத்துஇன்று வழமை போல் விமானசேவை நடைபெறவுள்ளதாக விமானப்போக்குவரத்து அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே அறிவித்துள்ளார்.

(வ)

## விமானநிலைய தாக்குதலை ரணில் கண்டிக்கிறார்

[கொழும்பு]

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பலமாக கண்டித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக ரணில்விக்கிரமசிங்கா தெரிவிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல்

(8ம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கில் நேற்று விமானத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ் குடாநாட்டு வான்பரப்பில் இரண்டு மிக் ரகபோர் விமானங்கள் தாழப் பறந்து வட்டமிட்டன. தென்மராட்சிமற்றும்வடமராட்சிப் பகுதியில் பெரும் இரைச்சலுடன் மாலை 4 30 மணியளவில் இவ்விமானங்கள் வட்டமிட்டன.

இதேவேளை நேற்று மாலை வடக்கு கிழக்கின் பல பகுதிகளிலும் விமானத் தாக்குதல்கள இடம்பெற்றதாக அரச தரப்பு அறிவித்துள்ளது. கிளிநொச்சி விசுவமடுப் பகுதியிலும் திருகோணமலையில் கூனிததீவு மற்றும் சில பிரதேசங்களிலும் விமானங்கள்

(8ம் பக்கம் பார்க்க)

## விமான நிலைய தாக்குதல் படைத்தரப்பில் குழப்பம்

விடுதலைப் புலிகள் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய விமானப்படைத் தளம் மீது மேற்கொண்ட தற்கொலை அதிரடித்தாக்குதலினால், படைத்தரப்பின் தலைமைப்பீடம் பெரும் குழப்பமடைந்துள்ளது.

இதனால் படையினர் மத்தியில பெரும் மனச்சோர்வும உளவியல ரீதியான பாதிப்பும்

[2ஆம் பக்கம் பார்க்க]

## தாக்குதல் நடத்திய 30 புலிகளில் 13 பேரின் சடலங்கள் மீட்பு ஏனையவர்கள் சென்றது எங்கே?

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய இராணுவ விமானப்படைத் தளம் மீது 25தொடக்கம் 30வரையான விடுதலைப்புலி உறுப்பினர்களைக் கொண்ட குழுவேதாக்குதலை நடத்தியுள்ளதாகத் படைத்தரப்பால் தெரிவிக்கப் படுகிறது.

இத் தாக்குதலில் பதின்மூன்று விடுதலைப் புலிகள் உயிரிழந்துள்ளதாகவும் அவர்களின்சடலங்கள்விமானநிலையப் பகுதியில் கண்டெடுக்கப் பட்டுள்ளதாகவும் படைத்தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

இந் நிலையில் விமானப் படைத்தளத்துக்குள் புகுந்த ஏனைய விடுதலைப்புலி உறுப்பினர்கள் எங்கே! என்ற கேள்வி படைத்தரப்பையும்

[8ஆம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

**கண்டெடுக்கப்பட்டது**

நாவலர் வீதியில் உள்ள எனது வீட்டிற்கு முன்னால் உடுப்புகள் அடங்கிய பொதி கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். P M இராமலிங்கம் 873 (65l). நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(3387)

**விற்பனைக்கு**

3K W டீசல் ஜெனரேற்றர் விற்பனைக்குண்டு தொடர்பு: 21, சீனியர் லேன், அரசடி வீதி. யாழ்ப்பாணம். T P. 2501

[C/2312]

**கோழி முட்டை விற்பனைக்கு**

எங்களிடம் கோழிமுட்டை, இறால், கருவாடு மொத்தமாகவும், சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம். மல்லிகா முட்டை விற்பனை நிலையம். 149, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் அருகாமை. யாழ்ப்பாணம்.

[3377]

விமான நிலைய

ஏற்பட்டுள்ளதாகவும், படையினரை உசார்ப்படுத்தவும் அவர்களின் மன அழுத்தத்தை அகற்றவும் படைத்தரப்பு உயர்பீடம் பலமுயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் படைத்தரப்பை ஆதாரம் காட்டி செய்திகள் வெளியாகின்றன. (இ)

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை

# தென்மராட்சிப் பாடசாலை மாணவர்

# தோற்றும் பரீட்சை நிலைய விபரம்

(மந்திகை)

எதிர்வரும் ஓகஸ்ற் மாதம் நடைபெறவுள்ள 5 ஆம்தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்கள், தோற்றும் பரீட்சை நிலையங்கள் பற்றிய விபரங்களைச் சம்பந்தப்பட்ட கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

இடம் பெயர்வினால் வடமராட்சி மற்றும் வலிகாமம் பகுதியில் வாழும் மாணவர்களின் வசதி கருதி அமைக்கப்பட்ட பரீட்சை நிலையங்களின் விபரங்கள் வருமாறு.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, எழுதுமட்டுவாள் கும்பச விதத்தியாலயம், பளை வேம்பொடு சேணி ஆகிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும்,

உசன் இராமநாதன் மகா வித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகா விதத்தியாலயம், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலைப் பரீட்சார்த்திகள் நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்திலும்,

சாவகச்சேரி மகளிர் கல்லூரி பரீட்சார்த்திகள் திரு இருதயக் கல்லூரியிலும்,

கொடிகாமம திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், மீசாலை விக்கினேஸ்வரா ஆகிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் கரணவாய் பொன்பல வித்தியாலயத்திலும்,

மட்டுவில் ஸ்கந்தவரோதய கல்லூரி பரீட்சார்த்திகள் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலும்,

கொடிகாமம் முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயப் பரீட்சார்த்திகள் அதே பாடசாலையிலும்,

நாவற்குழி மகாவித்தியாலய மாணவர்கள் உடுவிலில் இயங்கும் வசாவிளான் மகா வித்தியாலயத்திலும்,

வரணி மகாவித்தியாலய மாணவர்கள் நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும்,

பளை மத்திய கல்லூரி மாணவர்கள் தற்போது இயங்கும் புலோலி றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும், பரீட்சைக்குத் தோற்ற முடியும், என அறிவிக்கப்பட்டுள்ளது.

[உ-23]

## வலைப் பந்தாட்டம்

(மந்திகை)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குள் அபிவிருத்தி தொண்டர்களுக்கும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக பிரிவு அபிவிருத்தித் தொண்டர்களுக்கும் இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

(உ-23)

## தொழிலாளி காயம்

[மந்திகை]

பருத்தித்துறை இறங்குதுறையில் இந்துருவலி கப்பலில் இருந்து பொருட்கள் இறக்கிக் கொண்டிருந்த வேளை பொதிகள் மேல் விழுந்து தொழிலாளி ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடுப்பிட்டி வீதி தொண்டைமனாற்றைச் சேர்ந்த துரைராசா செல்வராசா (வயது-35) என்பவரே காயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இறங்குதுறைப் பகுதியில் இதற்கு முன்பு இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

[உ-23)]


## வலி. கிழக்கு பிரதேசசபை, நீர்வேலி

# கேள்வி அறிவித்தல்

கீழ்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் அரச திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் எதிர்வரும் 07 08 2001 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இக் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை "தவிசாளர், வலி கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி" என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் எதிர்வரும் 07 08 2001 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ, பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

| வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் | பொருட்கள் சேவைக்கானவரி |
|---|---|---|---|
| 1. பத்தைமேனி விநாயகர் சனசமூகநிலையத் திருத்தம் | 3000.00 | 500.60 | 62 50 |
| 2. சிறுப்பிட்டிபூமகள் பாலர் பாடசாலை திருத்தம் | 1000.00 | 250 00 | 31.25 |
| 3. நீர்வேலி விநாயகர் ச.ச. நிலையத்திருத்தம் | 1000.00 | 250.00 | 31 25 |
| 4. உரும்பிராய் ஆயுர்வேத வைத்திய சாலைக் கட்டடத்திருத்தம் | 4000.00 | 500.00 | 62 50 |
| 5. கோப்பாய் விக்னேஸ்வரா ச.சமூ நிலையத் திருத்தம் | 1000 00 | 250 00 | 31.25 |
| 6. அச்சுவேலி நவோதய ச.ச.நிலையத் திருத்தம் | 3000 00 | 500.00 | 62 50 |
| 7. ஊரெழு பாரதி ச.ச. நிலையத் திருத்தம் | 1000.00 | 250.00 | 31.25 |
| 8. அச்சுவேலி கலைமகள் பாலர் பாடசாலை திருத்தம் | 1000.00 | 250.00 | 31.25 |

மேற்குறிப்பிட்ட கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக்கட்டணங்களையும் செலுத்துவதன் பேரில், எதிர்வரும் 06 08.2001 ஆம் திகதி பி.ப. 12 30 மணி வரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரக் கட்டணங்கள் மீளளிக்கப்பட மாட்டாது இது சம்பந்தமான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பூ. குணசிங்கம், ஜே.பி யு எம்,
தவிசாளர்,
வலி. கிழக்கு பிரதேசசபை,
நீர்வேலி.

வலி கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி,
23.07.2001

(சி-2310)



## பின்னுறுதித்தீர்வை பற்றிய அறிவித்தல்

### பின்னுறுதித் தீர்வை
### மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

வல்லிபுரம் இளங்குமரன் பெண் எழிலோவியம்
[திருமணத்திற்கு முன் சிவசுப்பிரமணியம் மகள்]
ஆர்க்லேன், உடுவில்

வழக்காளி

வழ. இல: ம. நீ. /99

எதிராக

1. வல்லிபுரம் இளங்குமரன்
2. பாக்கியநாதன் மகள் தயாளினி
   இருவரும் நியூ சமணி வீதி,
   கல்வியங்காடு. நல்லூர் வடக்கு,
   நல்லூர்.

எதிராளிகள்

இவ் வழக்கு 2001 ம் ஆண்டு மே மாதம் 21 ம் திகதி மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. பாலசிங்கம் சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில் எடுக்கப்பட்ட பொழுது வழக்காளி சார்பில சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் சமுகமாயிருந்து எதிராளிகளுக்கு இவ்வழக்கில் அழைப்புக்கட்டளை பதிவுத் தபால் மூலம் அனுப்பி சேர்ப்பிக்கப்பட்டும் பிஸ்கால் மூலம் அழைப்புக்கட்டளை 2ம் எதிராளிக்கு 28. 02 2001ல் கொடுக்கப்பட்டிருந்தும், 1ம் எதிராளிக்கு கொடுக்கப்படாதிருந்த நிலையில் பத்திரிகையில் 06 0 , 2001ல் பிரசுரித்தும் எதிராளிகள் எவ்வித ஆட்சேபனையோ மறுமொழியோ சட்டத்தரணி மூலமோ அல்லது தாமாகவோ மன்றில் தோன்றியோ தெரிபடாதகாரணத்தால் இவ் வழக்கு எதிர்பில்லா விளக்கத்துக்கு எடுக்கப்பட்டு பின்வருமாறு தீர்க்கப்பட்டது.

வழக்காளியின் பிராதினையும் 15. 05. 2001ம் திகதி வழக்காளி மன்றில் அளித்த சாட்சியத்தையும் 'வ1' என அடையாளமிடப்பட்டு இணைக்கப்பட்ட திருமண அத்தாட்சிப் பத்திரத்தையும் மன்று நன்கு பரிசீலனை செய்து 1ம் எதிராளி வழக்காளியை வன்ம உறவறுப்பு செய்துள்ளாரெனக்கண்டு அதன் அடிப்படையில வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 96ம் ஆண்டு ஐப்பசி மாதம் 26ம் திகதி நடைபெற்ற பதிவுத திருமணத்தை நீக்கி வெற்றும் வெறிது மாக்குவதுடன், 1ம் எதிராளி வழக்காளிக்கு நிரந்தரப் பிரிமனைப் பணமாக ரூபா 2,00,000/-யும் செலுத்த வேண்டுமென்றும், மேலும் 1ம் எதிராளி வழக்காளிக்குரிய தாலிக்கொடி ஒரு சோடி காப்பு என்பனவற்றின் பெறுமதியான ரூபா 25,000/- ஐ வழக்காளிக்கு கொடுக்க வேண்டுமென்றும் வழக்காளிக்கும் 1ம் எதிராளிக்கும் பிறந்த திஷான் என்னும் ஆண் குழந்தையின் கட்டுக் காப்பிறகும் பராமரிப்பிறகும் வழக்காளியே உரித்துடையவரெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

மேலும் இப் பின்னுறுதித் தீர்வையானது இந் நாளேட்டில் பிரசுரிக்கப்படும் திகதியில் இருந்து மூன்று மாதகாலங்களுக்குள் எதிராளி ஏதேனும் எதிர்க் காரணம் இருப்பின் காண்பிக்கத்தவறின் இப் பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்பட வேண்டும் என்றும் கட்டளையிடப்படுகின்றது.

2001ம் ஆண்டு ஜூலைமாதம் 2ம் திகதி

ஒப்பம். பா. சுப்பிரமணியம்
மாவட்ட நீதிபதி,

வரைந்தவர்

ஒப்பம். சாந்தா அபிமன்னசிங்கம்
வழக்காளியின் பதிவுபெற்ற சட்டத்தரணி

ஒப்பம். செ. விக்கினேஸ்வரமூர்த்தி
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்

(3381)

## யாழ். பல்கலை மாணவர் மீது விதித்துள்ள நிபந்தனையை மீளப்பெறாவிட்டால் போராட்டங்களை நடத்துவோம்

### மாவை எம்.பி ஆவேசம்

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழகம் நியாயமான ஏதுக்களேதும் இன்றி மூடப்பட்டு மீண்டும் திறக்கப்பட்ட பொழுது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு யாழ் பல்கலைக்கழக மாணவர்கள மீது விதித்துள்ள நான்கு நிபந்தனைகளும ஏற்கக்கூடியவையல்ல.

யாழ் பல்கலைக்கழகத்தின் இன்றைய நிலை தொடர்பாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா விடுத்த செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

தென்னிலங்கையில் பல்கலைக்கழகங்களில் ஏற்பட்டவாறான வன்முறைகளோ, வன்முறைப்போராட்டங்களோ யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெறவில்லை இருந்தும் யாழ் பல்கலைக்கழகம் ஏதேச்சாதிகாரமாக மூடப்பட்டது. இது தவறானது.

யாழ். மாவட்டத்திலும் தமிழ்ப் பிரதேசங்களிலும் மாணவர்களின் கல்வி. போர் காரணமாகப் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது உண்மை.

தமிழினத்தின்உரிமைக்காகவும், மனித உரிமை மீறல்களுக்கெதிராகவும் குரல் கொடுப்பதற்கு மாணவர்களுக்கு உரிமையுண்டு.

அந்த வகையில் மாணவர்கள் அமைதியான முறையில் குரல் கொடுத்தனர் எழுச்சி கொண்டனர்; நாகரிகமுள்ள மாணவர்கள் தம்மினத்தின் விடிவுக்குக் குரல் கொடுப்பது நியாயமே. மனித குலத்தின், மாணவர்களின் இயல்பான உணர்வுகளை அடக்கியொடுக்கப் பல்கலைக் கழக மானியக்குழுவும், அரசும் முயற்சிப்பது மனித உரிமைகளை - அடிப்படை உரிமைகளை மறுப்பதாகும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களைப் பழிவாங்கும் நோக்குடன், அரசின் சர்வாதிகார உள்நோக்கங்களை நிறைவேற்ற பல்கலைக் கழக மானியக் குழுவைப் பயன்படுத்தும் அரசின் தீய முயற்சிகளை எதிர்க்கின்றோம்.

'அரசு உடன் அந்த நான்கு நிபந்தனைகளையும் திரும்பப்பெற வேண்டுமென அரசையும், உயர்கல்வி அமைச்சரையும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவையும் உடன் வற்புறுத்துவோம் அல்லது மக்கள போராட்டங்களை நாமே முன்னின்று நடத்துவோம் என்றுள்ளது; (உ)

## சமூகக் கல்வியறிவு கண்காட்சிப் போட்டி

(உடுவில்)

மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் சென்ற வாரம் நடைபெறவிருந்த வலயமட்ட சமூகக்கல்வியறிவு கண்காட்சிப்போட்டிகள பிற்போடப்பட்டுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் வி இராஜசையை அறிவித்துள்ளார். இதன்படி சமூகக் கல்வியறிவுப் போட்டி நாளை வியாழக் கிழமையும் கண்காட்சிப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 30 மணிக்கும் நடைபெறுவதுடன் இப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் உரிய நேரத்திற்கு சமுகமளிக்கும் படியும் கேட்டுள்ளார் [8-129]

## பொலிசார் வீசிய கண்ணீர்ப் புகைக்குண்டு காலாவதியானதாம்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கியத்தேசியக்கட்சியினால நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியைக் கலைப்பதற்காக பொலிசார் பயன்படுத்திய கண்ணீர்ப் புகைக்குண்டுகள் காலாவதியானவை என ஐக்கிய தேசியக் கட்சியின் மடச்சாளர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இத்தகைய காலாவதியான குண்டுகள் நச்சுத் தன்மையடைவதுடன் அரசாங்கம் ஜெனிவா ஒப்பந்தத்தை மீறி உள்ளதென்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (ந-5)

## ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டம் திங்கள் நடைபெற்றது

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி ஜே வி. பி நேற்றுமுன்தினம் 21 மாவட்டங்களிலும் நடத்திய ஆர்ப்பாட்டப்பேரணி அமைதியான முறையில் நடந்தேறியதாக கட்சியின் பிரசாரச்செயலரும் எம்பியுமான விமலவீரவன்ச தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், கடுவெல, கிரிபத்கொட, மஹரகம ஆகிய இடங்களில் நடைபெற்றது. இந்த ஊர்வலங்களில சுமார் இரண்டாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டார்கள் எனத்தெரிவிக்கப்பட்டுகிறது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசுக்கெதிரான கோஷங்களை எழுப்பியவாறும், சுலோகங்களைத் தாங்கியவாறும், ஊர்வலமாகச் சென்றனர்; இதன்போது பலத்தபொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது: (வ)

## 173 வது நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ யாக்கோபு ஆலய 173 வது ஆண்டு நிறைவு விழாவை யொட்டிய உயிர் மீட்சிக் கூட்டங்கள் இன்றும், எதிர்வரும் 27, 28, 29 ஆம் திகதிகளிலும் இடம் பெறவுள்ளன. (உ-124)

## நல்லைக் கந்தன் உற்சவம் இன்று

[யாழ்ப்பாணம்]

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லைக் கந்தன் உற்சவம் இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் நடைபெறவுள்ளது.

கடந்த வருடங்களைப் போல் இம்முறையும் வீதித்தடை உற்சவ காலங்களில் அமைக்கப்பட்டுள்ளன. சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ்படை, மக்கள் நலன்புரிச் சங்கம், மக்கள சேவைச் சங்கம், சாரணர்கள் தொண்டர் சேவையில் ஈடுபட்டுள்ளனர். செ104

## விபரம் சேகரிப்பு

[மந்திகை]

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்பை அடுத்து வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்ற விரும்பும் ஊழியர்களிடமிருந்து விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன; [உ-23]

## யாக்கோபின் ஆசீர்வாதம்

வானம் பூமி அனைத்தையும் படைத்து
வளமாய் நீயும் வாழ்ந்திட நினைத்து
கொடுத்தார் அறநெறி உனக்கெனபத்து
அதை ஏற்று நடப்பதே உனக்குச் சித்து

ஆண்டவர் கொடுத்தது நெறிகள் பத்து
அதுவே உனக்குப் பெரிய சொத்து
இருந்தும் உனக்கோ பிடித்தது பித்து
அதனால் விளைந்ததே பேராபத்து

பத்திலே நாலால் பரமனைப் பூசி
அன்பராம் ஜேசுவை அதனால் நேசி
மீதி ஆறையும நீ அப்பியாசி
அதனால் நீயோ பெரும் சுகவாசி

கர்த்தருக்குக் கீழ்ப்படிவதே அன்பு
இல்லை என்றால அது உன் வம்பு
ஜேசுவே கர்த்தரென்று நீ நம்பு
அதுவே உன் ஜீவனுக்குத்தென்பு

ஆறு நாளில் ஜோலியை நீக்கி
ஏழாம் நாளில் ஜேசுவை நோக்கி
தொழுதிடுவாய் பரமன் பாதத்தை
அடைந்திடு யாக்கோபின் ஆசிர்வாதத்தை

மு. கிருஷ்ணன் க.கு.அ. இல, 195
மட்டுவில் வடக்கு
சாவகச்சேரி.

இந்த உலகத்தையும் அதிலுள்ள சகலத்தையும் படைத்த தேவன் மனிதனை நித்தியமாக வாழவே படைத்தான். அவனின் கீழ்ப்படியாமையினால்மரணம் என்ற ஆபத்தை அடைந்தான். ஆயினும்கருணைக் கடவுள மனமிரங்கி மீண்டும்அவனை அந்த நித்திய வாழ்வுக்கு இட்டுச் செல்வதைக் குறிப்பதே இக் கவிதை.

## நல்லூரான் திருவடிக்கு 1



### "அருளுடன் ஆட்சியை நிறுவி விடு"

கொடியேற்றம் காணும் நல்லூர் முருகா!
அடியவர் வாழ்ந்திட அருள் தருவாயே.
இம்மையில் இந்தத் தலைமுறை பிழைத்திட
இரங்கி வந்து துணை புரிவாயே!

சண்முகனே! சரவணனே! சரணம் நீ முருகா
மண்ணிலினி குருதிசிந்தும் கொடுமை தீர் முருகா!
ஆவி குடிக்கும் ஆயுதங்கள் அழிய வேண்டும் முருகா!
அருளுடனே உன்னாட்சியை நிறுவி விடு முருகா!

சமூகஜோதி க. கணேசதாசன்

### கொடியேறின் மிடி தீரும்

மிடி தீர்ப்பாய் என்று மனக்கெட்டுப் பாட்டெழுதி
கொடியேற்றம் தோறுமே கோரி- விடிவு
வருமென் றிருந்தோம் வரவிலை நல்லூரா?
தகுமோ இனிக் கொடியேறித் தான்

நயினைச்சோதி

### துயரைக் களையும் அப்பா

கண்ணுதலான் கருணையால் அனலில் உருவாகி
அகிலமுய்ய புனலிலுதித்தவனே
புண்ணியமன தேவரும மூவரும் பூதலத்தாரும்
போற்றும் முதல்வா முருகா நல்லூரானே
எண்ணிலா இடர் சுமந்து ஏதிலியாய் ஊரோடி
உலகோடி மாழுதலைக் காண்கிலையோ?
விண்ணோர் சிறை மீட்ட வித்தகனே. மண்ணிலே
எமமினத்தின் துயரையும் களைந்துவிடு!

கந்த தியாகராசா

### இதமாக வாழ்வமைய . . . .

கொடியேறி வருகின்ற சிவனின் மைந்தா
கொடிய யுத்தம் தவிர்த்திடும கடம்பா
இலட்சம் பக்தர்கள் வேண்டுதல் ஏற்றும்
இதமாக வாழ்வமைய அருள் தரும்குகனே.

நாகமணி மகேந்திரலிங்கம்
வ. க கு. அ.65

### கொடியேறி வருகிறான்

சிந்தையில் ஒளியினை நல்கிடும் இறையவன்
சிறந்த தமிழிசை பாடிடவே

விந்தை புரிந்திடும் நல்லையின் காவலன்
சுந்தர நற்கொடி ஏற்றமின்றே

அழகுமணி முகமாறு அருளினொளி சிந்த
அடியவர்கள படுமிடிகள யாவையுமே விலக
பழமான தமிழ்க்குமரன் பதிமீதில் இன்று
பாவவினை அகலவழிகாட்டும் கொடி யேற்றம்

சு. குகதேவன்
க. கு. அ. இல-.117
தெல்லிப்பழை

### வெற்றிக் கொடியிது

வந்திங்கே மானிடத்தின் வாழ்க்கையிலே உண்மையென
சொந்தமெனும சேற்றில் சிக்கித் விக்கு-மெந்தனது
பந்தமரம் கட்டறுக்க ஏறுகவே நல்லையிற்
கந்தனின் வெற்றிக் கொடி

நா. நவராஜ்
கொழும்புத்துறை
க: அ கு இல-44

### நல்வாழ்வு எமக்களிப்பாய்!

வடிவோடும் வளமோடும் வனப்போடும் இருந்தமண்
துடிப்போடு தமிழ்மணக்க அருள்கொளித் திருந்தமண்
விடிகாலை மணியோசை செவியோரந் தழுவிட
படியேறிப் பார்புகழும உன்புகழ் படித்தமண்
வெடியோசை யதனாலே விடிவற் றுழலுகிறது
மிடியோடு பெரும்சோகங் கொண்டிங் கழுகிறது
துடியாகப் பார்மீது தமிழ்மங்கை துடிக்கின்றாள
வடிவழகுக் குமரேசனே! வேல்தாங்கும் அழகோனே!
கொடியேறுந் திருநாளில உன்தாள்கள் சரண்புகுந்தோம்
நெடிதான நல்வாழ்வை நம்மண்ணிற் கீந்திடுவாய்

நீர்வையூர் பராபரன்
க. கு. அ. இல. 02

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல- 27

## ஆக்கம்: செல்வி

★ **கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

''இந்தப் பாலை வனத்தில் ஓர் அரக்கி வசிக்கிறாள். அவள் உயிர்களைக் கொன்று புசிப்பவள்; எமனைப் போன்ற தோற்றத்தினள்; ஆயிரம் யானைப் பலம் உடையவள்; சுகேது என்ற இயக்கவீரனின் மகள். அவள் பெயர் தாடகை சுந்தன் என்பவன் அவளது கணவன் சுந்தனுக்கும் தாடகைக்கும் மாரீசன், சுவாகு என்ற இரு புதலவர்கள் உள்ளனர்; இராவணன் தாடகையின் சகோதரன். இவர்கள் அனைவரும் சேர்ந்து உலகத்திற்கு கெடுதல் செய்த வண்ணம் திரிந்தனர்.

1) மாரீசனுக்கும் சுவாகுவிற்கும் தாய்மாமன் யார்?
2) தாடகை வசித்த இடம் எது?
3) இந்தப் பந்திக்கு பொருத்தமான தொரு தலையங்கம் இடு?

★ **பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாளமிடுக.**

4) தாடகை அழகான இளம் பெண் [ ]
5) இவர்கள் அனைவரும் அழகான மாளிகையில் வசித்தார்கள் [ ]
6) இராவணன் தாடகையின் தந்தை [ ]
7) தாடகை ஆயிரம் யானைப்பலம் உடையவள் [ ]
8) அரக்க குலத்தினர் உயிர்களைக் கொன்று புசிப்பவர்கள் [ ]

★ **பின்வரும் சொற்களில் ஒன்று ஏனையவற்றிலும் வேறுபாடுடையது அதன் கீழ் கோடிடுக.**

9) அஞ்சலகம், கடிதம், பஸ்நிலையம், முத்திரை
10) கடல், சப்பல், கார், வள்ளம்
11) மீன், றால், நத்தை, நண்டு
12) பந்து, பொம்மை, மாபிள், பலூன்

★ **கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்ட வாக்கியத்தைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய சொற்களை அடைப்புக் குறிக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டில் எழுதுக.**

13) மனிதன் பிறந்த அன்றே ———— உறுதி
(கல்வி கற்பது, திருமணம் முடிப்பது, இறப்பது)
14) பிள்ளைகள் எப்பொழுதும் பெற்றோர்களிலும் ———— குறைந்தவர்களாகவே இருப்பர்
(அழகு, அறிவு, வயது, நிறம்)
15) தெய்வத்தை ஒரு போதும் ———— கூடாது
(கும்பிடக், நிந்தனை செய்யக், பார்க்கக்)
16) ஒவ்வொருவரும் எப்பொழுதும் ———— வேண்டும்
(சிரிக்க, சண்டைபிடிக்க, உண்மை பேச)
17) வயதில் இளையவர்கள் தம்மிலும் மூத்தோர்களை ———— நற்பண்பாகும்
(அவமதித்தல், மதித்தல், ஏசுதல், அடித்தல்)

★ **பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைத் தருக.**

18) மீன்பாடும் தேன் நாடு என அழைக்கப்படும் இடம் எது?
19) நாயன்மார் இருவரால் பதிகம் பாடப் பெற்ற ஈழ நாட்டுத் திருத்தலங்கள் எவை?
20) வெடியரசன் கோட்டை அமைந்திருந்த இடம் எது?
21) இலங்கையில் கிறிஸ்தவ மதம் பரவத் தொடங்கியது எப்பொழுது?
22) நமது நாட்டு சனாதிபதியின் பெயர் என்ன?
23) புகழ் பெற்ற வற்றாப்பளை அம்மன் ஆலயம் எங்கு அமைந்துள்ளது?
24) பரந்தனில் அமைந்திருந்த தொழிற்சாலை யாது?
25) எத்தனையாம் நூற்றாண்டில் இஸ்லாமியர்கள் இலங்கைக்கு வந்தனர்?

★ **பின்வரும் வாசகத்தைப் பயன்படுத்தி ஐந்து புதிய சொற்களை ஆக்குக.**

கானகத்தில் ஒரு கீதம்

26) ————————————
27) ————————————
28) ————————————
29) ————————————
30) ————————————

★ **பின்வரும் பழமொழிகளுக்கு உரிய கருத்தைத் தருக.**

31) ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு
32) தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்
33) அற்பனுக்கு பவிசு வந்தால் அர்த்தராத்திரியிலும் குடை பிடிப்பான்
34) முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
35) வினை விதைத்தவன் வினை அறுப்பான்

★ **பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைத் தருக.**

36) என்னிடம் 225 ரூபா இருக்கிறது, எனது தம்பிக்கு 25 ரூபா கொடுத்தால் இருவரிடமும் உள்ள பணம் சமனாக இருக்கும். எனது தம்பியிடம் முதலில் இருந்த பணம் எவ்வளவு?

என்னிடம் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள 50 சத நாணயங்களும் அவற்றின் இருமடங்கான 25 சத நாணயங்களுமுண்டு. எல்லா நாணயங்களினதும் பெறுமதி 5 ரூபா எனில்,

37) 50 சத நாணயங்கள் எத்தனை?
38) 25 சத நாணயங்கள் எத்தனை?

ஒரு முத்து மாலையில் நீல முத்துக்களும் வெள்ளை முத்துக்களும் உண்டு. இவ்விரண்டு நீலமுத்துக்களை அடுத்து இவ்விரண்டு வெள்ளை முத்துக்கள் அம்முத்து மாலையில் கோர்க்கப்பட்டுள்ளன. முத்து மாலையின் முதல் முத்து நீலமுத்து. அம்முத்துமாலையில் நாற்பது முத்துக்கள் உண்டெனில்,

39) இம்முத்து மாலையில் எத்தனை நீல முத்துக்கள்?
40) எத்தனை வெள்ளை முத்துக்கள்?

**குறிப்பு:-**
விடைகளை வேறுதாளில் எழுதி அனுப்பவும் இதற்கான விடைகளை 30 07-2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கவும்.

# புலமைப் பரிசில் பரீட்சை வினா இல - 26

### அதி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

01) ம. ஷாலினி, வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி
02) வே. துஷ்யந்தன், திருநெல்வேலி முத்துத் தம்பி மகா வித்தியாலயம்
03) அ. ஜெஜீரன், யாழ் பரியோவான் கல்லூரி
04) ச. ரஞ்சித்குமார், வல்வை. விநாயகர் வித்தியாலயம்
05) ச. கம்ணஸ்பரன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
06) பு. கயானா, வல்வை. அ மி த க பாடசாலை
07) கு. சிந்துஜா, வல்வை மகா வித்தியாலயம்
08) ம. வித்தியா, வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
09) ம. திலேஷ், வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
10) தே. தர்சன, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
11) சி பிரசிந், சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்
12) பி. பிரதீபா, வல்வை சிவகுரு வித்தியாலயம்
13) பா. சாயிஷங்கர், வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி
14) மோ. மதன, வல்வை மகளிர் வித்தியாலயம
15) ஞா. தர்சீயன், திருநெல்வேலி முத்துத் தம்பி மகா வித்தியாலயம்
16) யோ. வர்சிகா, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்
17) க. கஸ்ரோ, யாழ் மத்திய கல்லூரி
18) இ சரண்யா, அச்சுவேலி மகா வித்தியாலயம்
19) வே. விஜிக்குமார், வல்வை ம ம. வித்தியாலயம்
20) வா. பிரணவன், வல்வை அ மி.த.க பாடசாலை
21) இ ஸ்ரீராம், சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயம்
22) லூ அலன்டியந்தா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
23) பா. மதுரா, தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
24) தி. தனம்ஜெயன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
25) கு கேதவன், யாழ் மத்திய கல்லூரி
26) து. ஐங்கரன், யாழ். சென் ஜோண்ஸ் கல்லூரி
27) ப. மஜபந்திரா, யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
28) சி அஜந்தனா, ஆனைப்பந்தி மெதடிஸ்தமிசன் வித்தியாலயம்
29) சி நிரோஜினி, வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
30) ஈ. சிந்துஜ, நீர்வேலி சீ சீ த க பாடசாலை
31) க. கஜநதன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
32) க. நிரோஜினி, யாழ் புனிதமரியாள் வித்தியாலயம்
33) சி. சிவசொரூபன், யாழ் மத்திய கல்லூரி
34) சி. நிருபா, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
35) ர. சயந்தன், வல்வை. சிவகுரு வித்தியாலயம்
36) ஸ். ஸ்ரனிஸ்ராஜ், யாழ் மத்திய கல்லூரி
37) சி. பிரபூணா, மல்லாகம் கனிஷ்ட மகாவித்தியாலயம்
38) யோ சபேஸ்குமார், கல டி மெ மி.த.க பாடசாலை
39) ஏ தனுஷன், யாழ் மத்திய கல்லூரி
40) யூ. அன்ரன் நிரோஜ், யாழ் மத்திய கல்லூரி
41) நா. அனே ஜினி, யாழ் இந்து ஆரம்ப பாடசாலை
42) பு பிரசாந்தன், காரைநகர் தியாகராசா ம ம. வித்தியாலயம்
43) கி. கௌமி, நெல்லியடி மெ மி த க பாடசாலை
44) ச கிருஸ்ணவேணன், மீசாலை விக்னேஸ்வரா ம வித்தியாலயம
45) ச. நிவேதிகா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
46) பா. கிருஷ்ணபவான், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்
47) ச. பிரவீணா, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
48) ப. தாமரா, யாழ் இந்து ஆரம்ப பாடசாலை
49) சு. கோகுலன், புற்றளை மகா வித்தியாலயம்
50) ஞா. ரகுவர்மன், வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
51) செ. தக்ஷாயினி, பெரியபுலம் மகா வித்தியாலயம்

## கல்விப் பகுதி
## வினா இல - 27

"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ————
சொந்த முகவரி: ————
கற்கும் பாடசாலை: ————
மாணவர் கையொப்பம்: ————

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

## புலமைப்பரிசில் பரீட்சை வினா இல- 26 விடைகள்

01) திரு. பாலசுந்தரம்
02) எழுதுவினைஞர்
03) திருமதி பா சாந்தி
04) குழந்தைகளைக் கண்காணிப்பதுடன் வீட்டு வேலைகளையும் செய்தல்.
05) 35/7, புதுவீதி, யாழ்ப்பாணம்
06) ஒரு ஆண் சகோதரன்
07) பத்து வயது
08) மே மாதம்23–ஆந்திகதி
09) புரதச் சத்து
10) கறமுற
11) சடாரென
12) ஊற்றெடுக்கின்றன
13) வந்தது
14) சரி
15) பிழை
16) சரி
17) பிழை
18) பிழை
19) பைபிள்
20) ஆவியில்
21) விகாரை
22) சோதித்தறிய
23) சூரியஸ்தமனம்
24) சூரியனின் மறைவு
25) சூரியன் மறைந்தது
26) மலைநாடு
27) ஆனந்த சமரக்கோன்
28) ரட்ணசிறி விக்கிரம நாயக்க
29) நெய்தல்
30) நூற்றாண்டு விழா
31) 948
32) 1505
33) சங்கிலியன்
34) ஊர்காவற்றுறை
35) நயினாதீவு
36) வடக்குத் திசை
37) நான்கு புறாக்கள்
38) அ) அப்பாவின்வயது35
ஆ) அம்மாவின்வயது30
39) 31 முத்திரைகள்
40) லதாவிடம் 28 மாம்பழங்கள், சிவதாவிடம் 14 மாம்பழங்கள்

## நாய்கள் அழிப்பு

(செம்பியன்பற்று)

பருத்தித்துறைப் பிரதேச சபைக்கு உட்பட்ட கருகம்பன். மந்திகை, சாரையடி, காந்தியூர் கிராமக்கோட்டுப் பகுதிகளில் நாளை கட்டாக் காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளதால அன்றைய தினம் அப்பகுதி மக்கள் தமது வளர்ப்பு நாய்களை கட்டி வைக்கும்படி புலோலி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மா.சதீஸ் அறிவித்துள்ளார். (உ-42)

## குருபூசை

[யாழ்ப்பாணம]

உடுவில் முருகமூர்த்தி வித்தியாலய இந்து மாணவ மன்ற ஆதரவில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் சுந்தரமூர்த்தி சுவாமிகள குருபூசைவழிபாடு என்பன அதிபர் அ நடராஜசுந்தரம் தலைமையில நடைபெறவுள்ளன.

மாணவர்களது நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து ஓய்வு பெற்ற அதிபர் சமூகஜோதி கா. கணேசதாசன் ''கர்மயோகி சுந்தரர்'' என்ற தலைப்பில உரையாற்றுவார். (உ)

## அ. அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம)

சந்திரபுரம மட்டுவில் வடக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த வள்ளியம்மை வடிவேலு என்பவருடைய தேசிய அடையாள அட்டை விசேட அடையாள அட்டை என்பன கண்டெடுக்கப்பட்டு ''வலம்புரி'' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும். (செ)

## இன்று ஒரு தகவல்

# நாய் விரும்பிய தண்டனை

ஒரு நாய் உடலெங்கும் குருதி வழிய வலியால் துடித்துக் கொண்டே இராமரிடம் ஓடிவந்தது. அதன் மீது இரக்கம் கொண்டார் அவர். உடனே இலக்குவனை அழைத்து 'இந்த நாயின் நிலைக்கு யார் காரணமோ அவனை இங்கு கொண்டுவா' என்றார். அண்ணனின் கட்டளையை ஏற்ற இலக்குவன் வழியில வருவோர், போவோரை எல்லாம் விசாரித்தான். நாயைத் துன்புறுத்தியவன் ஓர் அந்தணன் என்பதை அறிந்து அவனை அழைத்துக் கொண்டு இராமரிடம வந்தான்.

அந்தணனை இராமர் விசாரித்தார். ஆனால் அவனோ 'நாய் என் வழியில் அடிக்கடி குறுக்கிட்டு குரைத்துத் தொல்லை தந்து கொண்டிருந்தது. அதனால் இப்படிச் செய்தேன்' என்று ஆணவமாகப் பதில் சொன்னான். இதைக்கேட்ட இராமர் முழுத்தவறும் அந்தணன் மீது தான் இருப்பதாக உணர்ந்தார். நாயைப்பார்த்து 'நீ இவனை எப்படித் தண்டிக்க நினைக்கிறாய்? சொல். அப்படியேசெய்கிறேன்' என்றார். இவனை ஒரு கோயில் தர்மகர்த்தாவாக ஆக்கி விடுங்கள் என்றது நாய்.

இராமர் இதைக் கேட்டு வியப்புடன் 'அது இவனுக்குத் தரும் பரிசாகுமே தவிர தண்டனையாகாதே' என்றார். அதற்கு அந்த நாய் 'நான் போன பிறவியில் கோயில் தர்மகர்த்தாவாகத் தான் இருந்தேன். அப்படியிருப்பவர் யாராக இருந்தாலும் தெரிந்தோ தெரியாமலோ கோயில் சொத்தில் கைவைக்காமல் இருக்க முடியாது. அப்படிக் கைவைத்தால் அடுத்த பிறவி நாய்ப்பிறவி தான். அடிஉதை தான். இவனும் என்னைப் போல் அடி உதை வாங்க வேண்டும் என்பதால்தான் அப்படிக் கேட்கிறேன்' என்றது. □

**பேராசிரியர் எ. சோதி**

---

## பொலிஸாருக்கு வழங்குவது போன்று

# அவசரகால கொடுப்பனவு கிராம அலுவலர்க்கு வழங்க கோரிக்கை

[தென்மராட்சி]

அவசர காலச்சட்டத்தின் கீழ் பொலிஸாருக்கு வழங்கப் படுவதைப போன்ற கொடுப்பனவை யாழ். குடாநாட்டிலுள்ள கிராம உத்தியோகத்தர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்குமபடி யாழ் மாவட்ட கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கைவிடுத்துள்ளது.

யாழ் மாவட்ட கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் உயர்மட்டக்குழுவொன்றுசங்கத்தலைவர் க. சிவராசா தலைமையில் நேற்றுமுன் தினம் அமைச்சர் டகளஸ் தேவானந்தாவைச் சந்தித்து கிராமசேவையாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடியது.

அக்கலந்துரையாடலின் போது கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தினால் கையளிக்கப்பட்ட மகஜரில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

தற்காலிக கிராம உத்தியோகத்தர்களை நிரந்தரமாக்குவது இனங்காண முடியாத பிரேதங்களை அடக்கம் செய்வதற்கான செலவை இரட்டிப்பாக்குதல், பட்டதாரிகளான கிராம உத்தியோகத்தர்களை பதவியுயர்த்தி சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல், நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை பிரதேச செயலகங்களாக தரம் உயர்த்துதல் ஆகிய நடவடிக்கைகளை காலதாமதமின்றி மேற்கொள்ள வேண்டும்.

(உ-77)

---

# குழப்பம் விளைவித்தோர் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே இடம் பெற்ற கிரிக்கெட் போட்டியின்போது அரசாங்கத்திற்கு எதிரான சுலோகங்களுடன் நுழைந்த இருவரும் கைது செய்யப்பட்டு நேற்று முன் தினம் பிணையில் விடப்பட்டுள்ளார்கள்.

கொழும்பு நீதவான் பிரிந்த பெரேரா இவர்கள் இருவரையும்தலா 20ஆயிரம்ரூபா பிணையில் விடுதலை செய்துள்ளார். இவர்களில் ஒருவர் கொழும்பு மேல் மாகாண சபை உறுப்பினர் எனவும், மற்றவர் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் எனவும்தெரியவந்துள்ளது. (ம)

---

## இராசி பலன்

25/ 7/ 2001

(ஆடி 9. புதன்)

பஞ்சமிபி.ப 2 16 வரை
உத்தரம பி ப 5.06 வரை
இராகுகாலம் 12 02- 1.3
நல்லநேரம 4 32- 6.02
அமிர்தசித்தம், கருடபஞ்சமி

**மேடம்**
நினைத்தகாரியம்கைகூடும், பகைவரால் நன்மை, ஆரோக்கியம், மனமகிழ்வு.

**இடபம்**
தாழ்வு நிலை, வியாபாரச் சிறப்பு, குடும்பக் கவலை, திடீர் நன்மை.

**மிதுனம்**
தன்னம்பிக்கைக் குறைவு, கல்வி மேன்மை, விரும்பாத உறவு, காரிய தாமதம்.

**கடகம்**
காரிய அனுகூலம், இனிய சம்பவம், கூட்டு முயற்சி, அந்நியர் சந்திப்பு.

**சிங்கம்**
வாக்குக் கலகம், தனவிரயம், காரிய தாமதம், கௌரவக் குறைவு.

**கன்னி**
ஜனவசியம், காரிய அனுகூலம, ஆழ்ந்த சிந்தை, சயன சுகம்.

**துலாம்**
பிரயாணம், பிதாசிந்தை, காரியச் செலவு, சயன சுகக் குறைவு.

**விருச்சிகம்**
குடும்ப சுகம், கீர்த்தி, தன லாபம், மனமகிழ்ச்சி.

**தனுசு**
கடின உழைப்பு, பணியாளர் உதவி, முயற்சிகைகூடும், அதிகாரம்.

**மகரம்**
வயிற்றுக் கோளாறு, பதட்டம, பிரயாணம், காரிய தாமதம,

**கும்பம**
பிரயாண பயம், எதிர்பாராத பிரச்சினை, அதிகாரிகள ஆதரவு, காரியதடங்கல்.

**மீனம்**
களத்திரசுகம், பிரயாணம், தனவரவு, கௌரவம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது )

-வளவன்

---

## பம்பலப்பிட்டி

# விடுதியில் தங்கியிருந்த இளைஞனைக் காணோம்

(யாழ்ப்பாணம்)

காலி வீதி பம்பலப்பிட்டிப் பகுதியில் உள்ள எம். சி. விடுதியில் தங்கியிருந்த கைதடி வாசியான தம்பிராஜா ரஜனி [வயது 23] என்ற இளம்குடும்பஸ்தரை கடந்த 3 மாதகாலமாகக் காணவில்லையென அவரது உறவினரால் யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தனது மனைவியை உறவினர்களின் வீட்டில் விட்டுவிட்டு அவர் விடுதிக்குத் திரும்பியதாகவும் ஆனால் அவர் விடுதிக்குத் திரும்பிச்செல்லவில்லை எனவும் அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[உ-10]

---

## வேதனம் வழங்கப்படவில்லை

# ஊழியர்கள் வேதனை

(மந்திகை)

தென்மராட்சி கல்வி வலயப்பாடசாலைகளில் கடமையாற்றும் கல்விசார், கல்விசாரா ஊழியர்களுக்கான ஜூலை மாத சம்பளக் கொடுப்பனவுகள், கட்டுநிதி வந்து சேராமையால் இதுவரை வழங்கப்படவில்லை.

வழமையாக 20 ஆம் திகதி இவர்களின் சம்பளம வழங்கப் படுகின்ற போதிலும் இற்றைவரை சம்பளம் வழங்கப் படாமை குறித்து பாதிக்கப்படும் ஊழியர்கள் வேதனை வெளியிட்டுள்ளனர்.

(உ-23)

---

# காணாமற்போனோர் பற்றிய விசாரணைகளுக்காக உறவினர்க்கு அழைப்பு

(யாழ்ப்பாணம)

1996, 1997 ஆம ஆண்டு காலப பகுதிகளில காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்தி வரும் விசேட புலனாய்வுப பிரிவினர் பின்வரும காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கு ஏதுவாக அவர்களது உறவினர்கள் மற்றும் சாட்சிகளை யாழ். பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு அழைத்துள்ளனர்.

★ கந்தசாமி ஜீவராஜ் (கோ இல. பி-09/03) சண்முகம் வீதி சாவகச்சேரி
சாட்சி:-மார்க்கண்டு தேவி

★ சின்னத்துரை செல்வநாதன் (கோ.- இல. பி-09/42) சரசாலை வடக்கு சாவகச்சேரி
சாட்சி;- சின்னையா, கதிர்காமம சின்னத்துரை

★ எஸ் இலங்கைநாயகம் (கோ. இல. பி-242) மறவன் புலவு மத்தி சாவகச்சேரி
சாட்சி; பி, பொன்னுசாமி

★ சரஸ்வதி சௌந்தராஜன் (கோ. இல. பி-116) மட்டுவில் வடக்கு
சாட்சி:-குட்டியன் தேவராசா

★ அட்புத்துரை சிறிஸ்கரன் (கோ. இல. பி-118) மட்டுவில் வடகக்கு சந்திரபுரம்
சாட்சி;-சீதா பாக்கியராசா, சிறிதரன் பத்மினி

★ யேசுதாசன் சுமன்கீவோ (கோ. இல. 404 குருநகர் உறவினர்களுக்கு அழைப்பு

★ இரத்தினம் தேவராசா (கோ. இல பி-438) நுணாவில் சாவகச்சேரி
சாட்சி;-இரத்தினம் தர்ம கோகிலன

★ இராசையா சுதர்மன் (கோ. இல. பி- 09/186) 167, விபுலானந்தர் வீதி அரியாலை
சாட்சி:- சந்திரன் சித்திரா

★ அந்தோனிப்பிள்ளை குயிலரன் ராஜ்குமார் (கோ. இல. பி-9/145) 29/ஏ கொண்டலடி குருநகர்
சாட்சி:- அந்தோனிபபிள்ளை றோபேட் சதீஸ்குமார்

★ கந்தசாமி சந்தீபன் (கோ. இல. பி- 9/114) கரவெட்டி தெற்கு
சாட்சி:-கிருஷ்ணலதா வீரசிங்கம் விஜயகுமார் (கோ இல. பி-425) கண்டி வீதி கொடிகாமம்
சாட்சி:-சின்னவன் கந்தசாமி

★ சடையன் பொன்னம்பலம் (கோ. இல. பி-211) அச்சுவேலி தோப்பு கொலணி
சாட்சி:-பார்வதி சடையன

★ குஞ்சன் அருந்தவராசா (கோ. இல. பி-412) மலர் மகள் வீதி கைதடி கிழக்கு

★ காசிப்பிள்ளை கதிரநாதன் (கோ. இல. பி-188) 488/1 கே. கே எஸ். வீதி யாழ்ப்பாணம்
சாட்சி;- புண்ணியமூர்த்தி காசிப்பிள்ளை. (உ-10)

---

# உதைபந்தாட்ட வல்லுநர் பிரான்சிஸ் யாழ்.வருகை

(சுண்டுக்குளி)

உதைபந்தாட்ட வல்லுநரும, யாழ்ப்பாண உதைபந்தாட்ட ரசிகர்களின் மனம் கவர்ந்த வீரருமான எப்.பிரான்சிஸ் இங்கிலாந்தில் இருந்து கடந்த வாரம் இங்கு வந்துள்ளார்.

அகில இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம், அவரது சொந்த இடமான யாழ்ப்பாண உதைபந்தாட்ட வீரர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டும என விடுத்த வேண்டுகோளையடுத்து கடந்த 23ஆம் திகதி இங்கு வந்து சேர்ந்த பிரான்சிஸ் நேற்று தொடக்கம் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் யாழ். சிரேஷ்ட தெரிவு அணி வீரர்களுக்கும், 19 வயதிற்கு உட்பட்ட அணி வீரர்களுக்கும் பயிற்சியை ஆரம்பித்துள்ளார்.

இரண்டு நாட்கள் மாத்திரம இடம்பெறவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட குறுகிய கால இப் பயிற்சி நெறியில் 50 வீரர்கள் பங்கு கொள்வது குறிப்பிடத்தக்கது.

லண்டனில் வசித்துவரும் பிரான்சிஸ் அங்கு உதைபந்தாட்ட மத்தியஸ்தர் ஆகவும், பயிற்றுநராகவும் கடமையாற்றிவருவது குறிப்பிடத்தக்கது. (உ-110)

---

## நல்லூரா . . . தாடா நலம்

உனதே என துயிரே என
உயிலே எழுதிடுறேன்.
உணர்வூறிய ஒளியே . . . உனை
முழுதும சரண் புகுவேன். .
நனவோ டெழும் நினைவோ, . . வரும்
கனவோ . . , சகலதினும்
கனம்நீ ... அருள் வனம் நீ... கவிக்
கவின் நீ என நிறைவேன் .

எதுவும் 'சரி' யெனவே நடந்
திடுமென்றுரைப்பவனே!
எதையும் அசைத்தமைதிக்குவ-
மையென உறைபவனே!
விதியை வகுப்பவனே! அறம்,
இயற்கை...களின் பொருளே!
புதுமை பல புவி கண்டிடும்
பொழுதும் ... பழம்புதிரே!

புவிமீதினில் உனையன்றியெப்
பொருளின் பினும் அலையேன்-
புயல், பொய் தொடும் பொது வாழ்விலுன்
புகழ் பாடி 'மெய் அறிவேன்';
''கவலைகளும் எனை - நான் இனும்
புடம் போடவே தருளாய்''
கவிவேன் உனில்; கணம் பின் வரும்

கருணை உன் மறவேன்
மடிதேடிடும் அடியார்களின்
மனம்- பண்செயும் கலைஞா!
படை கொண்டெழும் அசுரக்குணம்
பட ... நேர் வரும் தலைவா!
வடிவின் அடிமுடியாய் வரும்
மயிலேறிய முருகா!
குடி வாழ்வுற . . . குறை சொய்தெறி
குகாடியேற்றிய குமார!

த. ஜெயசீலன்

# இந்தோ புதிய அதிபருக்கு வெளிநாட்டுத் தலைவர்கள் வாழ்த்துச் செய்தி

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய அதிபராகத் தெரிவு செய்யப்பட்ட மேகவதி சுகர்ணோ புத்ரிக்கு பல நாட்டுத் தலைவர்களும் வாழ்த்தி செய்தியனுப்பியுள்ளனர்.

சிங்கப்பூர் அதிபர் ஆர் எல் நாதன் மற்றும் மலேசியப் பிரதமர் அவுஸ்திரேலியப் பிரதமர், ஆகியோரும் புதிய பதவி யேற்றிருக்கும் மேகவதியை வாழ்த்தியுள்ளனர். (து)

# இளம்பிள்ளைவாத போலியோ மருந்து போதியளவு இல்லை

(மந்திகை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்தான போலியோ போதியளவு அனுப்பி வைக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

நீண்ட காலத்துக்குப்பின்னர் அண்மையில சுகாதார திணைக்களத்தினால்குறைந்தளவு போலியோ மருந்துகளை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகாலமாக வழங்கப்படாதுள்ள குழந்தைகளுக்கே போலியோ வழங்கப்பட்டு வருவதாகவும் ஏனைய குழந்தைகள், பாடசாலை மாணவர்களுக்கு வழங்க முடியாதுளளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-23)

# மாவோ அமைப்பு வன்முறையை கைவிடும்?

(காட்மண்டு)

நேபாளத்தில் பொலிஸிற்கு எதிரான வன்முறையைக் கைவிடுமாறு நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் மாவோ அமைப்பு தனது அணியினரைக் கேட்டுளளது.

தலைமறைவு இயக்கமான மாவோ அமைப்பின் தலைவர் இந்த உத்தரவை விடுத்துள்ளார்.

இதேவேளை, புதிய பிரதமர் மாவோ இயக்கத்திற்கு எதிராக கடுமையாக நிற்பதைத் தவிர்க்கும்படி பொலிஸாரைக் கேட்டுள்ளார்.

குறிப்பாக மாவோ இயக்கத்தினருடனான போரை நிறுத்தும்படியும் கேட்டுள்ளார். (து)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூலை மாதம் 22 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

(மதுடாச்சி)

| | |
|---|---|
| 194282 ஏ | 194282 பி |
| 194289 ஏ | 194289 பி |
| 194296 ஏ | 194314 ஏ |
| 194314 பி | 194328 ஏ |
| 194371 ஏ | 194411 ஏ |
| 194411 பி | 194411 சி |
| 194411 டி | 194422 ஏ |
| 194436 ஏ | 194837 ஏ |
| 194838 ஏ | 194869 ஏ |
| 194880 ஏ | 194880 பி |
| 194880 சி | 194919 ஏ |
| 194911 ஏ | 194953 ஏ |
| 194998 ஏ | 194998 பி |
| 195014 ஏ | 195014 பி |
| 195019 ஏ | 195026 ஏ |
| 196028 ஏ | 196025 பி |
| 196102 ஏ | 196103 ஏ |
| 196103 பி | 196103 சி |
| 195137 ஏ | 195137 பி |
| 195820 ஏ | 195849 ஏ |
| 195855 ஏ | 195855 பி |
| 195807 ஏ | 195871 ஏ |
| 195871 பி | 195885 ஏ |
| 195925 ஏ | 195942 ஏ |
| 195942 ஏ | 195947 ஏ |
| 195947 பி | 195947 சி |
| 195960 ஏ | 195960 பி |
| 195971 ஏ | 195971 பி |
| 195982 ஏ | 195987 ஏ |
| 196031 ஏ | 196532 ஏ |
| 196969 ஏ | 197189 ஏ |
| 197189 பி | 197198 ஏ |
| 197198 பி | |
| 196075 ஏ | 196075 பி |
| 196075 சி | 196075 டி |
| 197115 ஏ | 197115 பி |

தெல்லிப்பளை

| | |
|---|---|
| 192379 ஏ | 192468 ஏ |
| 194262 ஏ | 197262 பி |
| 19726- சி | 194321 ஏ |
| 194443 ஏ | 194855 ஏ |
| 134855 பி | 194866 ஏ |
| 194913 ஏ | 194934 ஏ |
| 195021 ஏ | 195021 பி |
| 195021 சி | 195143 ஏ |
| 195998 ஏ | 196017 ஏ |

உடுவில்

| | |
|---|---|
| 201367 ஏ | 201393 ஏ |
| 204509 ஏ | 204509 பி |
| 204511 ஏ | 204517 ஏ |
| 204517 பி | 204522 ஏ |
| 204522 பி | 204523 ஏ |
| 204588 ஏ | 204588 பி |
| 204599 ஏ | 204599 பி |
| 161930 ஏ | 161930 பி |
| 161930 சி | 174788 ஏ |
| 175934 ஏ | 183237 ஏ |
| 183237 பி | 184927 ஏ |
| 185009 ஏ | 187142 ஏ |
| 187142 பி | 187143 ஏ |
| 189344 ஏ | 190547 ஏ |
| 191766 ஏ | 191766 பி |
| 191818 ஏ | 191818 பி |
| 191820 ஏ | 191820 பி |
| 191820 சி | 191958 ஏ |
| 192042 ஏ | 192042 பி |
| 192192 ஏ | 192234 ஏ |
| 192322 ஏ | 192322 பி |
| 193495 ஏ | 193523 ஏ |
| 193523 பி | 193532 ஏ |
| 193532 பி | 193532 சி |
| 193533 பி | 193535 ஏ |
| 193595 ஏ | 193595 பி |
| 193629 ஏ | 193629 பி |
| 193655 ஏ | 193655 பி |
| 194191 ஏ | 194233 ஏ |
| 194270 ஏ | 194270 பி |
| 194356 ஏ | 194414 ஏ |
| 194417 ஏ | 194467 ஏ |
| 194489 ஏ | 194879 ஏ |
| 194878 பி | 194898 ஏ |
| 194898 பி | 194930 ஏ |
| 194980 ஏ | 194980 பி |
| 194980 சி | 194987 ஏ |
| 194987 பி | 194987 சி |
| 195030 ஏ | 195051 ஏ |
| 195051 பி | 191077 ஏ |
| 195102 ஏ | 295102 பி |
| 195117 ஏ | 195136 ஏ |
| 195142 ஏ | 195813 ஏ |
| 1958 3 ஏ | 195813 பி |
| 195837 ஏ | 195838 ஏ |
| 195893 ஏ | 195905 ஏ |
| 195995 ஏ | |

# பாகிஸ்தானில் தொடர் மழை வெள்ளத்தில் சிக்கி 93பேர் பலி

(இஸ்லாமபாத்)

கடந்த 100 ஆண்டுகளின்பின் பாகிஸ்தானில் அண்மையில் பெய்த பெருமழையால் 93 பேர் இறந்துள்ளனர் என்றும் 30பேரைக் காணவில்லை என்றும் தெரிய வந்துள்ளது.

ஒரு கிராமம் வெள்ளத்தால் அள்ளப் பட்டுள்ளதாகவும் பல நகரங்களில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதாகவும்,

கிராமங்களுக்கிடையே தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதாகவும் மின்சாரம் தொலைத்தொடர்புகள் மற்றும் தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிய வந்துள்ளது

மீட்புப் பணிகள் தொடர்கின்றன என்றும் ராவல்பிண்டி இஸ்லாமாபாத் ஆகிய நகரங்கள் பாதிக்கப்பட்ட போதும் இப்போது நிலமை சீராகின்றன என்றும் தெரிய வந்துள்ளது. (து)

## பயிற்சிநெறி பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவு நடத்திய பத்திரிகையாளர் பயிற்சி நெறி பூர்த்தியடைந்துள்ளது

மேற்படி கற்கை நெறியில் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த ஞாயிறன்று கல்லூரியில் நடைபெற்றது. (உ-124)

## காங்கேசன் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என். ஜீவேஸ்வரா இன்று காங்கேசன்துறையில் உள்ள கைதிகள் தடுப்புமுகாம் சென்று கைதிகளைப் பார்வையிடுவதுடன் அவர்களின் உறவினர்களால் அவர்களுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் கடிதங்களை எடுத்துச் சென்று கைதிகளிடம் ஒப்படைப்பார்.

மேலும் கைதிகளினால் உறவினர்களுக்கு வழங்கப்படும் கடிதங்களையும் அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைப்பார். (உ-10)

## 4 கப்பல்களில் அத்தியாவசிய பொருட்கள்

[யாழ்ப்பாணம்]

சீமெந்து உட்பட குடாநாட்டிற்குத் தேவையான அத்தியாவசிய பொருட்கள், 4 கப்பல்கள் மூலம் பருத்தித்துறை இறங்குதுறையில் இறக்கப்பட்டு வருவதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [உ-10]

## குற்றங்களைந்து...

தமக்கு தீமை செய்தவர்க்குத் தீமை செய்வது தேளாப்பாம்புக்குணம். தீமை செய்யாதவர்க்கும் தீமை செய்வது பேய்க்குணம், தீமை செய்தவனை மன்னித்து அதை மறந்து, அவனுக்கு எவ்வித தீமையும் செய்யாதிருப்பது மனிதக்குணம், இவற்றையெல்லாம் கடந்து தீமை செய்தவர்க்கும் நன்மை செய்வது தெய்வ குணம். இதுவே அருள் எனப்படும். இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல் என்பது வள்ளுவர் வாக்கு. சொற்களில் தீச்சொல், சுடுசொல், கடுஞ்சொல், கொடுஞ்சொல் எனப்பலவகை யுண்டு. இந்தச் சொற்களை எளியவரிடத்தும் சொல்லாதிருப்பது நல்லது. 'இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம் வன்சொலால் என்றும் மகிழாதே' என்பது நல்லறிஞர்களது வாக்காகும் எனவே நல்லதை யெண்ணி, நல்லதைச் செய்து நலமுடன் முழுமையானவனாக வாழ முயல்வதே மேன்மையானது. □

# வடமராட்சி கிழக்கில் பனைமரங்கள் அழிப்பு

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள வலிக்கண்டி, மணற்காடு, குடத்தனைப் பகுதிகளில் பனை மரங்கள் அழிப்பு நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக அப்பகுதிப் பொது மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்தவகையில் இற்றை வரை ஆயிரக்கணக்கான பனைமரங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும், இதனை எவரும் தடுக்க முன்வரவில்லை எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை, மேற்படி பகுதி மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதில் பனைகள் கணிசமானளவு பங்கு வகித்தமை குறிப்பிடத்தக்கது. (உ-42)

UNIVERSITY OF JAFFNA
SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 31–08–2001 for the undermentioned posts.

1– FACULTY OF ARTS

i. ASSISTANT LECTURER (on Contract) in Anthropology / Archaeology / Art and Design/ Christian Civilization/ Dance / Bharathanatyam / Dance (Vocal) / Drama & Theatre Arts /Economics/ Fine Arts/ Geography/ Hindu Civilization/ Hindu Philosophy/ Music–Carnatic (Vocal, Veena, Violin) /Political Science/ Psychology/ Sanskrit /Sociology Tamil

ii. TUTOR (ON CONTRACT) in Geography/ History.

iii. INSTRUCTOR (ON CONTRACT) in Art and Design/ Danc/ Music/.

2– FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE

i. ASSISTANT LECTURER (ON CONTRACT) in Business Administration/ Commerce

ii. VISITING LECTURER in Law (Civil, Industrial Commercial)

3– FACULTY OF AGRICULTURE

i. ASSISTANT LECTURER (ON CONTRACT) / DEMONSTRATOR (ON CONTRACT) in Agronomy, Agricultural Biology, Agricultural Engineering, Agricultural Economics, Agricultural Chemistry, Animal Science.

ASSISTANT LECTURER (ON CONTRACT) in physical Education.

Application forms and other details may be obtained from the office of the SENIOR ASSISTANT REGISTRAR/ ESTABLISHMENTS, UNIVERSITY OF JAFFNA, SRI LANKA either in person or by sending a Money Order for Rs 20 – per from. Those who wish to obtain application forms by post are requested to send a money Order/ Postal Order drawn in favour of the BURSAR, UNIVERSITY OF JAFFNA together with a self–addressed stamped envelope 23 x 10 cm in size.

Applicants from the University System / Government Departments / Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions.

Applications received after the closing date will be rejected with out intimation,

Registrar
University of Jaffna,
Sri Lanka.

[C–2314]

மன நலம் மன்னுயிர்க்(கு) ஆக்கம் இனநலம் எல்லாப்புகழுந் தரும்.

— குறள்

## வலம்புரி

### ஐயகோ எரிக்சோலை கூப்பிடுக!

நாட்டின் அதி உச்ச பாதுகாப்பு வலயத்துள்ள கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் விடுதலைப்புலிகள் உட்புகுந்து நடத்திய அதிரடித்தாக்குதலைஎண்ணும் போது, 'பாரதப்போரில் பலவடிவங்கள் தாங்கி தாக்குதல் நடத்திய கடோற்சகனினுருவமே நினைவுக்கு வருகிறது. யாராலும் நினைத்துப் பார்க்க முடியாத - எதிர்பார்க்கமுடியாத இத்தாக்குதல், இலங்கையின் வரலாற்றிலும், விடுதலைப்புலிகளின் ஈழப் போர் வரலாற்றிலும் மறக்கமுடியாத நிகழ்வாகிவிட்டது.

கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்திற் குள்புகுந்த விடுதலைப் புலிகள் நாளை ஜனாதிபதிமாளிகைக்குள் புகுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சாவ தேசமும் புலிகளின் அதிரடித் தாக்குதலால் திகைத்துப் போயுள்ள நிலையில், ஆளும் தரப்பினர் உடனடியாக பாதுகாப்புச் சபையை கூட்டுவர். அங்கே ஒவ்வொருவரும் கருத்துக் கூறுவர் ஒருவர் எழுந்து புலிகளின் தாக்குதலை வெற்றிகரமாக முறியடித்து விட்டோமென்பர். (11 விமானங்கள் முற்றாக அழிந்த பின்பு) மற்றவர் எழுந்து புலிகளின் பலம் இல்லாது குறைந்துவிட்டது என்பர்.

ஆ.....ஹா அது மட்டுமா நேற்றைய தினமும் மிஞ்சியதுதவிமானங்கள் புலிகளின் நிலைகளை வட்டமிட்டு தாக்கியழித்தன என்பர். இது வரை பொறுத்திருந்த ஆனொருவர் தட்டுதடுமாறி எழுந்து புலிகளை இனிவிடமாட்டோம் என்பர்.

ஒட்டுமொத்தத்தில் முப்படைகளும் கூடாக, கட்டுநாயக்கா விமான நிலையம் படையினரின் முழுக்கட்டுப்பாட்டில் என அறிக்கை விடுவர். இதுஒரு புறம் நடக்கும். மறுபுறத்தில், எதிர்த்தரப்பில் இருந்து புலிகளின் தாக்குதலுக்கு அரசே முழுப் பொறுப்பு. பாதுகாப்பு அமைச்சர் பதவிவிலக வேண்டும், உடைந்தவிமானத்தை உடனே ஓட்ட வேண்டும். எரிந்த விமானத்தை, திருத்த வேண்டும். புகைபட்ட இடமெல்லாம் புனர்வாழ்வு வேண்டும்.என ஏராளமான அறிக்கைகள் வெளிவரும்.

எல்லாவற்றிற்கும் மேலாக புலிகளின் மீது உணர்ந்த சிங்கள மக்கள் ஐயகோ, எரிக்சோலைக் கூப்பிடுங்கள் என்பர்.

## கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு பிரகடனம்

# இனப் பிரச்சினைத் தீர்வில் இழுத்தடிப்பாகும்

அண்மையில் ஜனாதிபதி அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைச்செய்வ தற்கானமக்களாணையை பெறும் நோக்குடன்கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒன்றுக்கான பிரகடனத்தை வெளியிட்டிருந்தார். சாதாரணமாக எதிர்பார்க்கப்படுவதுபோன்று இது எதிர்க்கட்சிகளை மட்டும் திகைப்பிலாழ்த்த வில்லை. மாறாக அரச தரப்பு எம்.பிக்களையும். அமைச்சர்களையும் பெரும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டது மக்கள விடுதலை முன்னணியின் விமல் வீரவன்ச எம் பி கூறியதனாலேயே தனக்கு இவ்விடயம் தெரியவந்தது என்று புதன் கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ்தெரிவித்தார். அந்த அளவுக்கு அமைச்சர்களுக்கே தெரியப்படுத்த முடியாத இரகசியமாக விடயம் வைக்கப்பட்டிருந்தது.

ஐ.தே.கட்சியினர் இதனை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களை மேற் கொள்வதென முடிவு செய்தனர். ஆறு வழிகளால் கொழும்புக்குள் ஆறு ஊர்வலங்கள்ஆறாக பாய்ந்து வந்து மருதானையில்கலக்கும் என்றும் சுமார் பத்துஇலட்சம் பேர்கள் கலந்து கொள்வார்கள் என்றும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்திருந்தாலும், அவை நடைபெற முடியவில்லை. தோல்வியுமில்லை; வெற்றியுமில்லை.

### கால அவகாசம்

எவ்வாறயினும், பொ ஐ மு. அரசாங்கத்திற்குபாராளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டதால் அனுகூலங்கள் இருக்கவே செய்கிறது. அரசு பதவி விலகக் கூடிய சந்தர்பத்தை இரண்டு மாதங்களால்தள்ளி வைத்தது மட்டுமல்ல, அதன் பின்னரும் கவிழாமல் ஐந்து ஆண்டுகளுக்கு தொடர்ச்சியாக ஆளக்கூடியவாய்ப்பையும் பெறக்கூடிய நிலை இதனால் ஏற்படலாம் என்று நம்பப்படுகிறது. அதாவது,பேரம் பேசி எம்.பிக்களை கட்சி மாற்றுவது போன்ற தில்லுமுல்லுகளில் தோல்வி கண்டதும் கூட முஸ்லிம்காங்கிரசின் ஏழு எம்.பி.க்களையும், அவர்கள் பொ ஐ. முன்னணியின் எம். பிக்களென்றசட்ட நிலைப்பாட்டை காட்டிசட்ட நடவடிக்கைஎடுக்கும்வாய்ப்பு

### யூகி

தெரிகிறது. இதற்கானஆரம்ப நடவடிக்கைகளும் ஆரம்பித்து விட்டன. பொ.ஐ.மு. செயலாளர் எடுக்கும்முடிவே இந்த ஏழு எம்பிக்களின் எதிர்காலத்தைநிர்ணயிக்கும் என்ற வகையில், அவர்கள் சட்டத்தின் பிடிக்குள்ளிருந்து தப்ப முடியாமல் மாட்டி விடக் கூடும் என்று கருதப்படுகிறது. இது சுலபமாக நிறைவேறக் கூடியதல்ல என்றாலும், சட்டத்தின் கரங்கள் அரசுக்கு சாதகமானதாக இருக்குமாயின், ரவூப் ஹக்கீமை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியது தொட்டு ஆரம்பித்த இந்த நெருக்கடி நாடகம்,ஒரேயடியாக முற்றுப் பெற்று விடவும் முடியும். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நம்பிக்கையில்லாப் பிரேரணை பற்றிய அச்சமே இருக்காது என்ற நிலை ஏற்படலாம். பாராளுமன்றம் இல்லா விட்டாலும் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சியிலிருப்பதால் அச்சமடைவதற்கில்லைஎன்று அமைச்சர்ஒருவர்கூறியவார்த்தைகள் பொருள் பொதிந்தவை. இதனால் கிடைக்கக் கூடிய நீதிமன்ற தீர்ப்பு சாதகமாக இருக்குமாயின்மு.காங்கிரசின்ஏழுஎம்.பி.க்களையும் பதவியிலிருந்து நீக்கி விட்டு புதிதாக ஏழு எம்.பி.க்களை நியமிக்கும் வாய்ப்பு அமைச்சர் பேரியல் அஷ்ரப்புக்கு கிடைக்கலாம். அரசும்நம்பிக்கையில்லாப் பிரேரணை அச்சுறுத்தலிலிருந்து தப்பி விடலாம். இதற்கு கால அவகாசம் கிடைத்துள்ளது.

அவ்வாறு எதுவும் நடைபெறாவிட்டால் எதிர்க்கட்சிகளுக்கு செப்ரெம்பர் 7 ஆம் திகதிக்கு பின் அரசைக்கவிழ்க்கும்வாய்ப்புக்கள்ஏற்படலாம் ஆனால் அது பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைப்பதற்கு முன்பதாக நடந்தேற வேண்டும்.

### திரிசங்கு நிலையில்சபாநாயகர்

இந் நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்படாதவிதமாகப்பார்த்துக் கொள்ள வேண்டுமாயின் ஜனாதிபதியைமுந்திக்கொண்டு எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி மீது அரசியற் குற்றச்சாட்டுப்பிரேரணையை சரியானநேரத்தில் கொண்டுவர வேண்டியிருக்கும். ஆனால் அதிலும் சிக்கல் இருக்கவே செய்யும். அதாவது மூன்றில் இரண்டு பங்கு எம் பிக்களின் சம்மதத்தோடு சமர்ப்பிக்கப்பட்டால் மட்டுமே அதனை சபாநாயகர் கேள்விக்கிடமின்றி ஏற்றுக் கொள்வார், சாதாரண பெரும்பான்மையுடன்மட்டும் அரசியற் குற்றச்சாட்டுப்பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டால் அதனை சபாநாயகர் அவருக்கிருக்கும் தற்துணிபின் பேரிலேயே ஏற்றுக் கொள்ள முடியும் என்பது சட்ட நிலைப்பாடு இதனால்சபாநாயகரின் பாடு திண்டாட்டமாகலாம். நடுநிலை வகிக்க வேண்டிய பதவியை அவர் வகிக்கிறார். அவர் தான் சார்ந்திருக்கும் ஐ.தே.க. வின் நிலைப்பாட்டை ஏற்கவும் முடியாது. சகோதரிக்காக குடும்ப ஆட்சியை பாதுகாக்கும் தீர்மானத்தையும் எடுக்கவும் முடியாது ஆனால் இவற்றைசுலபமாகநிராகரிக்கவும்முடியாது. என்ற திரிசங்கு நிலை தோன்றலாம். எடுக்கும் தீர்மானத்தைப் பொறுத்து எதிர்க்கட்சிகள் ஆட்சிக்குவரவும முடியும். அல்லது ஆளும் கட்சியே தொடர்ந்தும் இருக்கவும் வாய்ப்புக்கிடைக்கலாம். அல்லதுபுதியதேர்தலும்வரலாம். இவ்விவகாரங்களில் தீர்மானம் எடுக்கும் சக்தியாக நீதி நிறுவனங்கள் முக்கிய பங்கை ஆற்றப் போகின்றன என்பது மட்டும் உண்மை. ஆக்ஸ்ட் 21 இல் நடைபெறக் கூடிய கருத்துக் கணிப்பின் பெறுபேறுகளால் பாராளுமன்ற நெருக்கடி பெரிதாக தீரப்போவதில்லை, 'ஆம் என்று வாக்களிப்பு நடந்தால் அரச தரப்புக்கு தெம்பு ஏற்படும் 'இல்லை' என்று தீர்ப்புக் கிடைத்தால்எதிர்த்தரப்பு நிம்மதியடையும். தமிழ் மக்கள் இனப் பிரச்சினைத் தீர்வுக்காக காத்திருக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகி விடும். சொல்ஹெய்மும் காத்திருக்க வேண்டியிருக்கும். □

# குற்றங்களைந்து குணத்தை மேம்படுத்தினால்

# மேலோர் உலகம் தானாக வந்து வாய்க்கும்

மனித உடல் மேன்மையானது. அதைவிடச் சிறந்தது உயிர் உயிரிலும மேலாகமதிக்கப்படுவது ஒழுக்கம். ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும். உயர்ந்தோர் கடைப்பிடித் தொழுகின்ற நல்ல நடத்தை தான் ஒழுக்கம்மென்பது, திருவினை அளித்துச் செல்வாக்கைக் கொடுக்கும். இந் நடத்தையானது நல்லதோற்றப, உயர் குடித் தொடர்பு, நீடித்த ஆயுள, கல்விச்சிறப்பு போன்றவற்றைச் தருவதோடு நோய்கள அணுகாதவாறும் காக்கும். ஆகவே ஒழுக்கத்தினைக் கண்ணினும் மேலாகக் காத்தல் வேண்டும்.

### நன்னலம்

நன்றி மறவாமையும் நல்லொழுக்கமாகும். நாய் தன்னை வளர்த்தவர்கள தனக்கு அடித்து உதைத்து எககேடு விளைத்தாலும, கோபித்துச் சீறாது வாலைக் குழைத்து காலை நக்கும், சிறுமை வந்தாலும்பொறுமை பேணுதல் நன்றாகும். வலியவர் முன்பு சிறினாலும் எளியவர் முன் ஆறுதல் கடமையாகும். யாருடனாயினும் இனியவை கூற வேண்டும். பகைவரிடத்தும கொடு மொழி கூறா தொழிக, இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருக்கக் காயைப்பறித்துண்பது போன்றதே. எந்தஉயிருக்கும் தீங்கு எண்ணலாகாது. எத்திறத்தாலும் எவ்வுயிர்க்கேனும தனனுயிர் கொடுத்தாவது நன்னலம புரிவது நன்மை பயக்கும்.

பொய் தவிர்த்து வாய்மையைப்பேணுதல்நலம்வாய்மை யென்பது தீமை பயவாததூய வாசகம் சொல்லுவதாகும். மக்களனைவரும் மனத்

### மேலோர் உலகம்

நல்லவை செய்தால் நலமுண்டாகும். தீயவை தீயன பயக்கும் என்பதை இல்லையென்பாரையும், கடவுள் இல்லையென்றுரைக்கும் மூடர்களையும் தீமைபயக்கும் செயல்களைச்செய்வோருடன் உறவாடி மகிழ்வோரையும், கள (மது) என்னும் வெறிப்



## தினசரி தியானம்

## அறிதற் கெளியது

வானில் இலங்குமசூரியன்போன்றுசெம் பொருளே, நீஎன் உளளத்தில் இலங்குகின்றாய்.

சான்றோர் புகட்டிய செந்நெறியைக் கடைப்பிடித்தால்மக்கள சான்றோர்ஆகககூடும. அச்செந்நெறி அறிதற் செளியது. நேரானது அதற்கு வியாக்கியானம எழுதவேண்டியதில்லை கல்லாதவர்க்கும் குழந்தைகளுக்கும் அது விளங்குகிறது. அதுபேச்சுக் குரியதல்ல வாழ்வோடு சம்பந்தபபட்டது அதை அனுஷ்டிக்குமளவு மனத்தகத்துள்ள தெய்வீகத்தையும் நாம அறிந்து கொள்ளமுடியும.

திரையற்ற நீர்போல் தெளிய எனத் தேர்ந்த
உரைபற்றி உற்றங்கு ஒடுங்குநாள்

—எந்நாளோ?

தாயுமானவர்

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

## வசந்தா மணாளன்

தொற்றுமையுடன் வாழ்வதே மேலான வாழ்க்கையாகும். பொறுமையானது கடலிலும் பெரியது, அடக்கம் மலையிலும் பெரியது ஒருவர்க் குதவி செய்தல் பூமியிலும் மாணப் பெரிய்து ஒழுக்கம் உயிரினும் மேம்பட்டது. மானம் அதைவிட உயர்ந்தது. மானம் கெட்ட (தொழில்) செயல்களைப் புரிவோரை ஏழ்பிறப்பினும் ஈனம் தொடர்ந்து கொண்டிருக்கும். உலகில் தன்னையே கொல்லும் சினத்தை விடக்கொடுமையானது எதுவுமில்லை. சொல்லா விடத்துச் சினம் தீது. சொல் லிடத்தும் இதனை விடத் தீமையானது இல்லை எனலாம். சினமானது நகைப்பை அழித்து உவகையைக் கொல்லும்.

பகையை ஏற்படுத்திப் பாவத்தை விளைவிக்கும்-நட்பினையும் பிரித்து வைக்கும்.

பொருளை விரும்பி நுகர்வோரையும, கடுமையான சூதாடுபவர்களையும், பறவைகளைப் பிடித்து இரக்கமின்றிஉயிர்க் கொலை புரிவோரையும் கொடிய விஷப்பாம்பெனக் கருதி அஞ்சுவதோடு, அத்திறந்தறிவிலார் தம்மை அறவே ஒதுக்கி, மேன்மையான குணம பொருந்திய பெரியோர்களைப் பேணி, உரிமையோடு ஒப்புரவாகிக் குற்றங்களைந்து,குணத்தைமேம்படுத்தி வாழ்ந்தால் மேலோர் உலகம் தானாக வந்து வாய்க்கும்.

### நன்னயம் செய்தல்

அனபு என்பதும அருள் என்பதும் மக்கள் உளளத்தே இளகி விளையும் ஒன்றாகும், அன்பு பற்றுதலையும் அருள் இரக்கத்தையும்குறிக்கும். ஒருவரையொருவர் அடித்துத்துன் புறுத்துவது விலங்குக்குணம் தன்னலங் கொண்டு உயர்ந்து செல்வது பறவைக்குணம்,

(6ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு ஜனாதிபதியே முழுப் பொறுப்பு

## குற்றம் சாட்டுகிறது ஜே. வி. பி

(கொழும்பு)

உயர்பாதுகாப்பு கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த கட்டுநாயக்கா விமானநிலையம் மீது, தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டதாக்குதல், அரசபடையினருக்கு விடுக்கப்பட்டபாரிய சவால்.

இவ்வாறு ஜே வி பி நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ்அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

1983ம் ஆண்டு கறுப்பு யூலையால் அப்பாவித் தமிழ் மக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டும் அவர்களதுஉடமைகள் நாசமாக்கப்பட்டு பெரும் அழிவுகளை தமிழ் மக்கள் சந்தித்தனர்.

இதனை நினைவு கூர்ந்தே விடுதலைப்புலிகள் விமானப் படைத்தளம் மீது பெரும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

கறுப்புயூலையைமுன்னிட்டு விடுதலைப்புலிகள் இத்தகையதொரு பாரியதாக்குதலை மேற்கொள்வரென்று தெரிந்திருந்திருக்கும், அரசாங்கம் கேந்திர நிலையங்களில் பாதுகாப்பில் அசட்டையாக இருந்துள்ளதென்றும் ஜே வி பி குற்றம் சாட்டியுள்ளது.

இத்தாக்குதலால் ஏற்பட்ட இழப்புகளுக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவுமே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும், ஏனெனில் ஜனாதிபதி முப்படை தளபதி. எனவே இச்சம்பவத்துக்கு அரசும் ஜனாதிபதியுமே பொறுப்பென்று ஜே.வி.பி சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதிலும், ஆட்சியை தக்கவைப்பதிலும் கவனம் செலுத்தியதே தவிர நாட்டின் பாதுகாப்பில் கவனம் செலுத்தவில்லையென்று குறை கூறியதுடன், சர்வஜன வாக்கெடுப்பை கைவிட வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளது. (இ)

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

கொழும்பு கட்டுநாயக்கா நீர்கொழும்பு யாஎல ஆகிய பகுதிகளில் நேற்றுஅதிகாலை அமுலுக்கு வந்த ஊரடங்கு நேற்று பிற்பகல் 2 மணிக்கு நீக்கப்பட்டது. (வ)

## புலிகள் ...

★ எம ஐ 17 ரக ஹெலி ஒன்று

★ பயிற்சி விமானம் மூன்று

★ 27 ரக புக்காரா விமானம் ஒன்று

★ எயர் லங்காபயணிகள் விமானம் மூன்று

இதுதவிர ★ எண்ணெய் சரக்குவிமானங்கள் மூன்று சேதமடைந்துள்ளது. (வ)

## வடக்கு கிழக்கில்

தாக்குதல் நடத்திமதாக அறிவிக்கப்பட்டது.

நேற்று மாலை மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதல்கள் ஒரு பெரும் நடவடிக்கை அல்ல தலது தாக்குதல பலம் இன்னும் அழிக்கப்பட்டு விடவில்லை எனபதைக் காட்டும் நோக்கிலேயே இலங்கை விமானப்படை இத்தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது என்று பி. பி. ஸியின்இலங்கை செய்தியாளர் கருத்துத் தெரிவித்துள்ளார். (ந- 8)

## ஆனந்தக் களிப்பில் வன்னி வாழ் மக்கள்

(வவுனியா)

கட்டுநாயக்கா விமானத் தளம் மீது விடுதலைப்புலிகள் வெற்றிகரமாக தாக்குதல் மேற்கொண்டதையிட்டு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப்பகுதி எங்கும் மக்கள் மிக எழுச்சியுடன் காணப்படுவதாக வன்னித்தகவல்கள் தெரிவிக்கின்றன.

வீதிகள் எங்கும் மக்கள் புரட்சி கீதங்களை இசைத்தும் புலிகளை வாழ்த்தும் கோசங்களை எழுப்பியவாறும் ஆரவாரம் செய்ததாகவும் இயக்க வெற்றி ஆரவாரங்களில் ஈடுபட்டிருப்பதால் பாடசாலைகள் மற்றும் பணி நிலையங்களில் ஆட்களின் எண்ணிக்கை குறைவடைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

### நாகர் கோவிலில் ஷெல் தாக்குதல்

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியை நோக்கி நேற்றுமாலை முதல் பலத்த எறிகணைத் தாக்குதல்களை சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்டனர். (வ52-)

### 13 பேரின்

புலனாய்வுப் பிரிவினரையும் வியப்புக்குள்ளாக்கியிருப்பதுடன் பெருங்கிலி கொள்ளவும் வைத்துள்ளது.

இப் புலிகள் விமானப் படைத்தளத்திலிருந்து தப்பித்து சென்று விட்டனரா, அல்லது கொழும்பு நகருக்குள் ஊடுருவி மீண்டுமொரு தாக்குதலுக்கு தயாராகி வருகின்றார்களா எனப் படை உயர்மட்டம் குழம்பிப் போயுள்ளது.

மழை ஓய்ந்தும் தூவானம் ஓயாதது போன்று விமானப் படைத் தளச்சமர் முடிந்தும் படையினர் மத்தியில் குழப்பம் நீங்கவில்லையென இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள். [இ-65]

### 'வீ' வடிவில ..

அதனை பொலிஸார் கவனத்தில் எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கறுப்புநிறக் கண்ணாடிகள் பொருத்தப்பட்டு சீலையால் மறைக்கப்பட்ட றோசாரக மினிஸ்ஒன்றிலேயே விடுதலைப்புலிகளின் படையணியினர் வந்ததாகவும் இந்த மினிபஸ் மாத்தறை என்ற பெயர்ப்பலகையுடன் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தமினிபஸ்ஸைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணிதற்போது பொலிசாரினால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது [வ]

### விமானநிலைய

மெழுகுடைய பெறலாம் என்று கடந்த 2ம் திகதி தமிழ்நெற் செய்தி வெளியிட்டிருந்தும் அரசு அதில் அக்கறை செலுத்தவில்லை என்றும் அதனால் அரசே இத்தாக்குதல் சம்பவத்திற்கு பொறுப்பேற்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இத்தேயேவை ஐக்கிய தேசியக்கட்சி நடத்திய ஊர்வலத்தினாலதான் புலிகள் ஊடுருவினர் என்பதை அவர் மறுத்துள்ளார். [வ]

---

## பாராட்டி வாழ்த்துகிறோம்

### திரு. இ. இராமலிங்கம் அவர்கள்

யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளராகப் பதவியேற்று மாநகர முதல்வருடன் இணைந்து சிக்கல்களைக் களைந்து சிறப்பாகச் சேவையாற்றுவதற்கு எமது பாராட்டுக்களைத் தெரிவித்து அவரது சேவை தொடர வாழ்த்துகிறோம்.

25-07-2001 கட்டைவேலி நெல்லியடி

கரவெட்டி. ப. நோ. கூ. சங்கம.

[C/2311]

---

## வன்னி பெருநிலப்பரப்பில் ஈழநாதம் விசேட பதிப்பு

கட்டுநாயக்கா சர்வதேசவிமான நிலையத்தில் உள்ள விமானப்படைத் தளத்தின்மீது நேற்று அதிகாலை புலிகள் மேற்கொண்ட அதிரடித்தாக்குதலைதலைப்பு செய்தியாகக் கொண்டு இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில்இருந்து வெளிவரும் ஈழநாதம் பத்திரிகை விசேட பதிப்பொன்றை நேற்று வெளியிட்டுள்ளது அவ்விசேட பதிப்பில இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில அப்பாவிப் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டு அப்பாவிப்பொதுமக்களை கொன்று குவித்து குண்டுவீச்சு விமானங்கள் தாக்கி அழிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## முஸ்லிம் காங்கிரஸ் கண்டனம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய. விமானப் படைத்தளத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம். ஒருதுரதிஷ்டவசமான நிகழ் வென்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது.

சம்பவம் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

இவ் ஆண்டு தலைநகரில் தாக்குதல்கள் எதுவுமற்ற அமைதி நிலைகாணப்பட்டது இதற்குரிய காரணம இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சர்வதேச மத்தியஸ்தத்துடன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதே ஆகும ஆனால் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு தனது சொந்த அரசியல் லாபம் கருதி மேற்கொண்ட நடவடிக்கையால் மீண்டும் தலைநகரில் பாரதூரமாக அனர்த்தம் நடந்துள்ளது.

இனப்பிரச்சனையை தீர்க்க பின்தள்ளப்படுகின்ற ஒவ்வொரு நாளும் உயிர் இழப்புக்கள் ஏற்படுவதோடு பொருளாதாரமும் சீர்குலைகிறது.

நாட்டை அழிவிலிருந்து காப்பாற்றக்கூடிய அரசியல் தலைமையை பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் இழந்து விட்டது நாட்டின் அதியுயர் பாதுகாப்பு பகுதிக்குள். விடுதலைப் புலிகள் புகுந்து நடத்திய தாக்குதலை தடுத்து நிறுத்தவோ முறியடிக்கவோ முடியாத அரசின் கையாலாகாத்தனம் இதனையே எடுத்துக்காட்டுகிறது. என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### சர்வதேசத்தை

நடைபெற்ற இத்தாக்குதலின்போது புலிகளுக்கும, விமானப்படையினருக்கும் இடையே பலத்த மோதல் இடம்பெற்றது.

அதிஉயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்தவிமானத் தளத்தில விடுதலைப் புலிகள் ஊடுருவித் தாக்குதல் நடத்தியிருப்பது படைத்தரப்பில் அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும ஏற்படுத்தி உள்ளது.

### மூன்று கட்ட தாக்குதல்

கட்டு நாயக்கா விமானத் தளத்தின் மீதான முதலாவது தாக்குதல் நேற்று அதிகாலை 3. 55 மணிக்கும, இரண்டாவது தாக்குதல 4. 15 மணிக்கும, மூன்றாவது தாக்குதல் 7 45 மணிக்கும இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. 45 மணியளவில் விமானம் ஒன்று வெடித்துச்சிதறியதாகவும், அப்போது பதுங்கியிருந்த விடுதலைப் புலிகள் கட்டுநாயக்கா விமானத்தளத்தில தரித்து நின்ற விமானங்களைத் தாக்கி அழித்தனர்.

### ரூபவாகினிப் படப்பிடிப்பாளர் காயம

சர்வதேச விமான நிலையத்தில ஊடுருவிய விடுதலைப் புலிகள் விமான நிலையக்கட்டுப்பாட்டுக்கோபுரத்தின மீது ஏறி தாக்குதல் நடத்திய போது படம் பிடிக்கச் சென்ற ரூபவாகினிப் படப்பிடிப்பாளர் ஒருவரும் அங்கிருந்த காவலாளி ஒருவரும் காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விமான நிலையத்தில் ஊடுருவிய மூன்று தற்கொலைக் குண்டுதாரிகள் மும்முனையூடாக தற்கொலைத் தாக்குதலை மேற்கொள்ள ஏனைய புலிகள் கனரக ஆயுதங்கள், குண்டுகள் சகிதம உக்கிரமான தாக்குதல்களைத் தொடுத்தனர். இதன்போது, யுத்தவிமானங்கள் உட்பட 11விமானங்கள் முழுமையாக அழிக்கப்பட்டதுடன மூன்று விமானங்கள் சேதமாக்கப்பட்டது இதன்போது 13 விடுதலைப் புலிகள் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## கொழும்பு விஜயம் ரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து நாளை கொழும்பு செல்லவிருந்த சர்வமத குழுவினரின் கொழும்பு விஜயம ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக யாழ் அரச அதிபர் க. சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

---


உங்களது நயம், நம்பிக்கை நாணயமுள்ள, தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

# நியூ நதுலா ஜுவல்லறி

74, கஸ்தூரியார் வீதி, --- யாழ்ப்பாணம்.

நியூ லலிதாஸ் ஜுவல்லறி — 171, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்,

[இ/2195]

நதுலா நகைமாடம் — 241C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு யூலை மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.